1981 ஏப்ரல் 28]

ஆகையால் செவிலியர்களுக்கு ஒட்டுமொத்தமாகத் தெரியாது என்று சொல்லுவது அவர்களுடைய பயிற்சியின் தரத்தைக் குறைப்பதாகும். டாக்டர்களே ஊசி போட வேண்டுமென்றால் நோயாளிகளைப் பார்த்து, பிரிஸ்கிரிப்ஷன் கொடுப்பதில் தடங்கல் ஏற்படும். நோயாளிகளைப் பார்த்து பிரஸ்கிரிப்ஷன் கொடுப்பது டாக்டர், மருந்து கொடுப்பது மருந்தாளுநர், ஊசி போடுவது செவிலியர். இந்த முறைதான் பல்லாண்டுக் காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது, இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, தற்போது பென்சிலின் ஊசி போடுவது குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் அதனால் மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்றது என்பதா? அல்லது இப்போது தயாரிக்கப்படுகின்ற பென்சிலின் மருந்தின் தரக்குறைவா? காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த பென்சிலின் ஊசி கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே போகின்ற நேரத்தில் அனாபிலிஸ்டிக் ரீஆக்ஷன் வருகின்றது. ஆகவே டிஸ்கிரிமினேட்டட் ப்ரெஸ்கிரிப்ஷன் இல்லாமல் பென்சிலின் பயன்படுத்தப்படக் கூடாது என்று ஆணையிட்டு இருக்கிறோம். இதைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். ஏன் என்றால் எதற்கெடுத்தாலும் இதைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே இதற்கென்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இதனை செட்யூல்ட் ட்ரக்ஸ் 'எச்' குரூப்பிலே சேர்த்துவிட்டால் இந்தமாதிரி பிரச்சினைகள் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவ மனைகளுக்கென இந்திய மருந்தக நிறுவனத்திடமிருந்து வாங்கப்பெற்ற மருந்துகள்.

*** வினா எண் 919—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கென (IDPL) Indian Drugs and Pharmaceuticals Limited விடமிருந்து ஒரு ஆண்டிற்கு எவ்வளவு தொகைக்கு மருந்துகள் வாங்கப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: 1979-80-ல் ரூபாய் 2,66,23,096 பெறுமான மருந்து பொருட்கள் இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மாசூட்டிகல்ஸ் இடமிருந்து அரசு, மருத்துவமனைகளுக்காக வாங்கப்படுகிறது.

[1981 ஏப்ரல் 28

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, வருடத்திற்கு ரூபாய் 2 கோடி 66 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனை களுக்காக வாங்கப்படுவதாக அறிவித்தார்கள். இந்த மருந்துகளை தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே இங்கேயே தொழிற்சாலை களை ஆரம்பிக்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஐ.டி.பி.எல். தமிழ் நாட்டிலேயே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் நம்முடைய பணமும் போடப்பட்டு ஜாயின்ட் செக்டாரிலே தான் மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. தாதா என்ற இந்த கம்பெனியிலே இருந்துதான் மருந்துகளை வாங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங்குகின்ற மருந்துகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய கம்பெனியிலே தயாரிக்கக்கூடிய மருந்தாகத்தான் அவை இருக்கின்றன. மேலும் ஐ.டி.பி.எல்; என்பது அரசாங்கத்தினுடைய ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங் கப்படுகின்ற மருந்தின் தரம் பிரைவேட் கம்பெனியிடமிருந்து வாங்கப்படுகின்ற மருந்தை விடக் குறைவாக இருக்கின்றன என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தினுடைய நிறுவனத்தில் தயாரிக்கப்படுகின்ற மருந்தின் தரத்தைப்பற்றி இப்போது கேள்வி கேட்டுப் பயன் இல்லை.

குடந்தை அரசினர் மருத்துவமனை.

* வினா எண் 920—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) குடந்தை அரசினர் மருத்துவமனையில் அன்றாடம் வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இருக்கின்ற படுக்கைகளை கூடுதலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 1,392.

(ஆ) இம் மருத்துவமனையில் கூடுதலாக 50 படுக்கைகள் போட ஏது வாக புதிய பகுதிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.